# தேசியக் கருத்தரங்கம்

# தமிழ் இலக்கியங்களில் வேளாண்மை

## *National Seminar on*

## 'AGRICULTURE IN TAMIL LITERATURE'

கருத்தரங்க ஆய்வுக்கோவை

(2020-2021)


தமிழாய்வுத்துறை

தூய வளனார் தன்னாட்சிக் கல்லூரி

(A++ தரத்தகுதியும் செயல்திறன் ஆற்றல் வளத் தனித்தகுதியும்
சிறப்புத் தொன்மைத் தகுதியும் பெற்றது)

திருச்சிராப்பள்ளி - 620 002.

# தமிழ் இலக்கியங்களில் வேளாண்மை

பதிப்பாசிரியர்கள்

**முனைவர் ஞா. பெஸ்கி**

**முனைவர் சி. ஷகிலா பானு**

தேசியக் கருத்தரங்கம்

**26 மார்ச், 2021**

**தமிழாய்வுத்துறை**

**தூய வளனார் தன்னாட்சிக் கல்லூரி**

('A++' தரத்தகுதியும் செயல்திறன் ஆற்றல் வளத் தனித்தகுதியும்
சிறப்புத் தொன்மைத் தகுதியும் பெற்றது)

திருச்சிராப்பள்ளி - 620 002.

நூலின் பெயர் : தமிழ் இலக்கியங்களில் வேளாண்மை

பதிப்பாசிரியர்கள் : முனைவர் ஞா. பெஸ்கி
முனைவர் சி. ஷகிலா பானு

நுவல் பொருள் : ஆய்வுக்கட்டுரைகள்

பதிப்பு : 2021

மொழி : தமிழ்

உரிமை : தமிழாய்வுத்துறை

எழுத்துரு : 11 புள்ளி

பக்கங்கள் : (xiv) + 596 = 610

அச்சிட்டோர் : தி பிரிண்டிங் ஹவுஸ்
காஜாமலை, திருச்சி-23.
போன் : 2420121 / 94435 87233

நூல் அளவு : டெம்மி

நூல் வெளியீடு : தமிழாய்வுத்துறை
தூய வளனார் தன்னாட்சிக் கல்லூரி
திருச்சிராப்பள்ளி-620 002.

ISBN - : 978-93-91563-04-2

# ‘இன்னும் மீதமிருக்கிறது நம்பிக்கை’ எடுத்துரைக்கும் வேளாண்மைச் சிக்கல்கள்

முனைவர் ஞா.பெஸ்கி,
தமிழாய்வுத்துறைத்தலைவர்,
தூய வளனார் கல்லூரி, திருச்சிராப்பள்ளி-2

ஆய்வுச்சுருக்கம்

இலக்கியம், பண்பாடு, இயற்கைச்சூழல் ஆகியவற்றின் வாயிலாக உலகளாவிய சூழலியல் சிக்கல்களைக் கண்டறிவதற்குத் துணைபுரியும் இலக்கிய அணுகுமுறையாகச் சூழலியல் திறனாய்வு அமைந்துள்ளது. ஆய்வுகளில் மனிதனை மையமிட்ட அணுகுமுறையை விட பூமியை மையமிட்ட அணுகுமுறையை வலியுறுத்துவதாகச் சூழலியல் திறனாய்வு அமைந்துள்ளது. இதன் விளைவால் மண்ணின் மரபை மீட்டெடுக்கும் நோக்கில் பசுமை இலக்கியங்கள் உருவெடுக்கத் தொடங்கின. உலகமயமாக்கல், நாகரிகமயமாக்கல் ஆகியவற்றின் பெயரால் அழிந்துகொண்டிருக்கின்ற இயற்கையோடு இயைந்த வாழ்க்கையை மீட்டெடுக்க முனைவதால் பசுமை இலக்கியம் வாசகனோடு நெருக்கத்தைக் கொண்டுள்ளது. தமிழிலக்கியப்பரப்பில் பசுமை இலக்கிய முன்னோடிகளாகப் பலர் அறியப்பட்டாலும் 1980களின் இறுதியில் தொடங்கிச் சூழலியல் விழிப்புணர்வு ஏற்படுத்தும் நோக்கில் சூழலியல் நூல்களைத் தொடர்ந்து வெளியிட்டுவருவதில் பூவுலகின் நண்பர்கள் அமைப்புக்குத் தனித்ததொரு இடம் உண்டு. அவர்களால் வெளியிடப்பெற்ற ‘இன்னும் மீதமிருக்கிறது நம்பிக்கை’ என்னும் தழுவல் வகையான கவிதை நூலில் நாகரிகம் அறியப்படாத தொடக்கமனிதனின் வாழ்வியலில் தொடங்கி வளர்ச்சித்திட்டங்கள் பெயரிலான இயற்கைச் சுரண்டல், அதனை வளர்த்தெடுக்கும் முதலாளியச் சிந்தனைகள், அதற்கு எதிரான சூழலியலாளர்களின் கடமைகள் இறுதியாகப் பல சிந்தனைகள் பதிவு செய்யப் பெற்றுள்ளன. இருப்பினும் இந்நூலின்வழி வேளாண்மைச் சீர்கேட்டினை அரசியல் மற்றும் கருத்தியல் பின்னணியில் எடுத்துரைப்பதும் சீர்கேட்டிற்கு எதிராக முன்வைக்கும் பாதுகாப்பு முழக்கத்தைப் பறைசாற்றுவதும் சூழலியல்சார் பொறுப்புணர்வை வளர்த்தெடுக்கும் தேவையை முன்வைப்பதும் இக்கட்டுரையின் செல்நெறிகளாக அமைகின்றன.



கலைச்சொற்கள்

பசுமை இலக்கியம், சூழலியல் திறனாய்வு, உலகமயமாக்கல், பூவுலகின் நண்பர்கள், காப்புரிமை, அறிவுசார் காப்புரிமை, முதலாளியம், பசுமைப்புரட்சி, சூழலியலாளர்கள்

## முன்னுரை

1990க்குப் பிறகு உலகமயமாக்கல், தனியார் மயமாக்கல், தொழில்மயமாக்கல் ஆகிய முன்னெடுப்புகளின் விளைவால் இயற்கைச்சூழல் புறக்கணிக்கப்பட்டதோடு சீர்கேட்டையும் சந்தித்தது. வளர்ச்சித்திட்டங்கள் என்று நம்பப்பட்டவை எல்லாம் போலியானவை என்பதை உணரத் தொடங்கிய பிறகு சில படைப்பாளர்கள் தங்கள் படைப்புகளில் இயற்கையைப் பற்றி எழுதத் தொடங்கினர். புனைவிலி இலக்கியமாகத் தோற்றம் கொண்ட பசுமை இலக்கியம் தற்போது கவிதை, சிறுகதை, புதினம் போன்ற புனைவிலக்கியமாக மாற்றம் பெற்று வளர்ந்து வருகிறது. இவ்வாறு வளர்ந்து வருகின்ற பசுமை இலக்கியங்களுள் ‘முதல் சூழலியல் கவிதை’ என்று அறியப்படுகின்ற ‘இன்னும் மீதமிருக்கிறது நம்பிக்கை’ என்னும் நூல் குறிப்பிடத்தக்கது. தழுவல் வகையாக அறியப்பட்டாலும் தமிழகத்துச் சூழலில் சூழல்பாதுகாப்பை வலியுறுத்தும் இந்நூலின்வழி வேளாண்மை சந்திக்கும் சிக்கல்களைக் கண்டறிவதாக இக்கட்டுரை அமைகிறது.

## சூழலியல் திறனாய்வு

சூழலியல் திறனாய்வு என்பது இலக்கியம் மற்றும் இயற்கைச்சூழலை துறையிடை நோக்குநிலையில் ஆராயும் பிரிவாகும். சூழலியல் திறனாய்வு எனப்படும் Ecocriticism 1972இல் மீக்கர் என்பவரால் இலக்கியச் சூழலியல் என்னும் பெயரில் உருவாக்கப் பெற்றது. அதன்பின் வில்லியம் ரியுகெர்ட் என்பவரால் 1978இல் இலக்கிய இயக்கமாக முன்வைக்கப்பெற்றது.

சூழலியல் திறனாய்வின் வரலாறானது நான்கு அலைகளாகப் பாகுபாடு செய்யப்பெற்றுள்ளது. சூழலியல் திறனாய்வின் முதல் அலையானது(1980-1990) இயற்கையை வரலாற்றுக்கு மாறான முறையில் ஆராய்ந்தது. அரசியல் மற்றும் கருத்தியல் போக்குகளைக் கவனத்தில் கொள்ளாமல் காட்டுயிர் மற்றும் இயற்கையைக் குறித்து விதந்துரைப்பதாக மட்டும் இது அமைந்தது. இரண்டாம் அலையானது (1991-2000) மனிதனை மையமிட்ட சூழலியல் ஆய்வுகளைக் கட்டுடைத்தல், வல்லாண்மை, சூழலியல்

சீர்கேடுகள், விலங்குகள் மற்றும் தாவரங்கள் பற்றிய சார்புநிலை, சூழலியல் கருத்தியலாகப் பாலினம் மற்றும் வர்க்கத்தை அணுகுதல் போன்ற வழிகளில் இலக்கியப் பகுப்பாய்வை அணுகுவதற்கான புதிய பாதையை வழங்கியது. மூன்றாம் அலையானது (2001 -2007) புவிவெப்பமடைதல் போன்ற சுற்றுச்சூழல் சிக்கல்களுக்கு எதிராக வாதிடுகிறது. நான்காம் அலையானது (2008 முதல் இன்றுவரை) மனித உடல்மீதான சூழலியல்நீதியை வலியுறுத்தும் சூழல்பெண்ணியம் சார்ந்ததாக அமைகிறது. மேற்கண்ட சூழலியல் திறனாய்வை அடியொற்றி எழுவதாகப் பசுமை இலக்கியம் அமைந்துள்ளது.

## பசுமை இலக்கியம்

பசுமை இலக்கியம் என்பது சூழலியல் சிக்கல்களை எடுத்துரைக்கும் புனைகதைகள், கவிதைகள், திறனாய்வு உள்ளிட்ட இலக்கியங்களைச் சுட்டுகிறது. உலகிலே மிகப் பெருமளவில் நகரமயமாக்கலைச் சந்தித்த இங்கிலாந்தே பசுமை இலக்கியத்தின் தோற்றுவாயாக அமைந்துள்ளது. வில்லியம் வேர்ட்ஸ்வொர்த், ஜான்கிளேர், ஜான் ரஸ்கின், வில்லியம் மோரிஸ், எட்வர்ட் கார்பெண்டர் ஆகியோர் இங்கிலாந்தின் சூழலியல் சிக்கல்கள் குறித்து இலக்கியம் படைத்தனர். அவ்வாறே அமெரிக்காவின் வால்ட் விட்மன், ஹென்றி டேவிஸ் தோரோ ஆகியோரும் பசுமை இலக்கியப் படைப்பாளர்களே ஆவர். ஜெர்மனியில் இயந்திரமயமாக்கல் தொடங்கியபோதும், இலத்தீன் அமெரிக்க நாடுகளில் சூழலியல் பாதிப்பு ஏற்பட்டபோதும் எழுந்த எதிர்ப்புகளும் பசுமை இலக்கியங்களைத் தோற்றுவித்தன எனில் அது மிகையில்லை.

பசுமை இலக்கியம் என்பது மண்ணையும் மற்றும் மண்ணின் மரபையும் அடிப்படையாகக் கொண்டது. இழந்த வேளாண்சார் சொற்களை மட்டுமன்றி தொலைத்த வரலாற்றையும் மீட்டெடுப்பது இதன் முக்கிய பணியாக உள்ளது. உலகமயமாக்கல், நாகரிகமயமாக்கல் ஆகியவற்றின் பெயரால் அழிந்துகொண்டிருக்கின்ற இயற்கையோடு இயைந்த வாழ்க்கையை மீட்டெடுக்க முனைவதால் பசுமை இலக்கியம் வாசகனோடு நெருக்கத்தை ஏற்படுத்துகிறது.

பெண்ணியம், தலித்தியம், அரவாணியியம், புலம்பெயர்ந்தோரியம் போன்ற இலக்கிய இயக்கங்களின் தோற்றத்திற்கும் அதனைச் சார்ந்த இலக்கிய வகைமைகளுக்கும் முறையே பாலின ஒடுக்குதல், சாதிய அடிமைத்தனம், பாலின அடையாள மறுப்பு, வாழிட உரிமை மறுப்பு ஆகியவற்றிற்கு எதிரான உரிமைக்குரலே காரணமாக அமைந்தது. பசுமை இலக்கியமும் இத்தகைய வரலாற்று நோக்கிலே உருவாகத் தொடங்கின.



அதாவது "சூழலியல் போராட்டத்தின் எழுத்துவடிவமே பசுமை இலக்கியம் என்கிற வகைப்பாடாக மாறியிருக்கிறது. அதன் தொடர்ச்சியாகத் தான் அயல்மொழியில் வெளியான சூழலியல் சார் படைப்புகள் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டன. இதற்கான தேவை திட்டமிட்டு உருவாக்கப்பட்டதல்ல. காலம் தனக்கான தேவையைத் தானே நிவர்த்தி செய்து கொள்ளும் என்கிற விதியின் அடிப்படையில் பார்த்தோமென்றால் உலகமயத்தின் பிடியில் சிக்குண்டிருக்கும் இக்காலத்தின் தேவை பசுமை இலக்கியம் எனலாம்"[1] என்கிறார் பசுமை இலக்கியப் படைப்பாளர் நக்கீரன். (http://kaviyam.in மின்னிதழ்-டிசம்பர் 2016)

## தமிழில் பசுமை இலக்கியங்கள்

பசுமை இலக்கியங்கள் தமிழில் பாரதியின் வசனக்கவிதையில் களம் காணத் தொடங்குகின்றன எனினும் ந.பிச்சமூர்த்தியின் கவிதைகளில் பசுமைச்சிந்தனைகள் பரவலாகக் காணப்படுகின்றன. சூழலியல் எனினும் மா. கிருஷ்ணன், எம்.ஏ.பாட்சா, பிலோ இருதயராஜ், ஆர்.பி சீனிவாசன், மங்களராஜ் ஜான்சன், தியோடர் பாஸ்கரன், பால கதிரேசன் போன்றோர் பசுமை இலக்கிய முன்னோடிகளாகத் தமிழிலக்கியப் பரப்பில் அறியப்படுகின்றனர்.

## பசுமை இலக்கியப் பங்களிப்பில் பூவுலகின் நண்பர்கள்

1980களின் இறுதியில் சூழலியல் விழிப்புணர்வு ஏற்படுத்தும் நோக்கில் சூழலியல் நூல்களை வெளியிட்டவர் பூவுலகின் நண்பர்கள் அமைப்பை உருவாக்கிய நெடுஞ்செழியன் ஆவார் தமிழகச் சுற்றுச்சூழல் சிக்கல்களைக் குழுவாக முன்னெடுத்த இவர் தன்னைத் தேடிவந்த இளைஞர்கள் சுற்றுச்சூழல் சார்ந்து கருத்தியல் அடிப்படையில் செயல்பட வழிகாட்டினார். இந்தியன் ஓவர்சீஸ் வங்கியில் பணிபுரிந்த இவர் ஆம்னஸ்டி இண்டர்நேஷனல் அமைப்பின் இந்தியப் பிரிவுத் தலைவராகச் செயல்பட்டார். மனித உரிமைகள், சமூகநீதி ஆகியவற்றுக்காகப் போராடியவர் சூழலியல் சிக்கல்களை மார்க்சிய பார்வையில் அணுகினார்.

உலகமயமாக்கல், தாராளமயமாக்கல், தனியார்மயமாக்கல் எதிர்காலத்தில் விளைவிக்கும் சீரழிவுகளை முன்னறிவித்ததோடு காப்புரிமை, அறிவுசார் சொத்துரிமை என்னும் கருத்தாடலை எதிர்த்தும் வந்தார். பூவுலகின் நண்பர்கள் குழுவில் சி.மா.பிரீதிவிராஜ், குமாரசாமி, புருஷோத்தமன், நீலகண்டன், சீனு.தமிழ்மணி, பாமயன், செந்தில்குமரன்,

போப்பு சுதாலட்சுமி, ரமேஷ்பாபு, புனித பாண்டியன் போன்றோர் குறிப்பிடத்தக்க பங்களிப்பை ஆற்றியுள்ளனர். இந்நிலையில் இக்குழுவை ஒருங்கிணைத்து வந்த நெடுஞ்செழியன், அசுரன் போன்றோர் மரணமடைந்ததால் சில ஆண்டுகள் இக்குழுவின் செயல்பாட்டில் சுணக்கம் ஏற்பட்டது. எனினும் முன்னோடிகளான அவர்களைப் பின்பற்றிப் பல்துறை சார்ந்த சூழலியல் அக்கறை கொண்டவர்கள் சென்னையில் மீண்டும் அந்த இயக்கத்தின்கீழ் இணைந்து செயல்படத் தொடங்கியுள்ளதோடு நின்றுபோன 'பூவுலகு' இதழ் மீண்டும் வெளிவரத் தொடங்கியுள்ளது.

இயற்கைச்சூழல் சீர்கேட்டில் உள்ளூர் அரசியல் முதல் உலகமயமாக்கல் வரை செலுத்தும் ஆதிக்கத்தை எடுத்துரைப்பனவாக இவர்களின் நூல்கள் அமைந்துள்ளன. இவர்கள் பெரும்பாலும் மொழிபெயர்ப்பு நூல்களை வெளியிட்டபோதிலும் விழிப்புணர்வை ஏற்படுத்துவதையே முதன்மை நோக்கமாகக் கொண்டிருந்தனர். மொழிபெயர்ப்பு நூல்களாக இருப்பினும் தமிழகத்தின் சூழலுக்கு ஏற்ப அவற்றைத் தழுவல் படைப்பாகவே வெளியிட்டுள்ளனர். எனவே கூட்டாக வெளியிடப்பட்ட நூல்களில் படைப்பாளரின் பெயர்களைத் தவிர்த்துப் 'பூவுலகின் நண்பர்கள்' என்றே குறிப்பிட்டுள்ளனர்.

"நம்மாழ்வார், பூவுலகின் மைந்தர்கள், கூடங்குளம் அணுஉலை எதிர்ப்புப் போராட்ட நண்பர்கள், நம்மாழ்வாரையொத்த இன்னொரு சுற்றுச்சூழல் அறிஞரும் களச்செயல்பாட்டாளரும் தமிழுணர்வாளருமான பாமயன் முதலியோருடன் உரையாடல் நடத்தி சூழலியல் பற்றிய மார்க்ஸியக் கண்ணோட்டத்தை வளர்த்தெடுப்பதில் இடதுசாரி அமைப்புகளும் கட்சிகளும் தவறிவிட்டன"[2] (எஸ்.வி.ராஜதுரை(2015), ப.114) என்னும் கருத்து இவ்வியக்கத்தினரின் நேரிய பணிகளுக்குத் தமிழக அரசியலாளர்கள் ஏற்பளிக்கத் தவறியதைப் புலப்படுத்துகிறது.

### இன்னும் மீதமிருக்கிறது நம்பிக்கை- நூல் அறிமுகம்

பூவுலகின் நண்பர்கள் கூட்டுப்படைப்பாக்கம் என்னும் செல்நெறியைப் பின்பற்றி வெளியிட்ட 'இன்னும் மீதமிருக்கிறது நம்பிக்கை' என்பதே தமிழின் முதல் சூழலியல் கவிதையாகும். 2017 ஆம் ஆண்டு வெளிவந்த இந்நூல் டாம் வெபர் எழுதிய 'All the Heroes Are Dead: The Ecology of John Steinbeck's Cannery Row' என்னும் ஆங்கிலநூலைத் தழுவி எழுதப்பெற்றது. இப்புவி சந்தித்துக் கொண்டிருக்கும் சூழலியல் சிக்கல்களைக் கவிதை வடிவில் எடுத்துரைக்க முற்படுகிறது. எனினும்



உலகளாவிய சிக்கலைத் தமிழ் மண்ணின் மரபுக்கேற்ப இந்நூல் விளக்கியுரைக்கிறது. முதல் மனிதனில் தொடங்கி இயற்கைச் சீரழிவின் பல்வேறு பரிணாமங்களைச் சித்திரிக்கும் இந்நூல் இறுதியில் சூழலியலாளர்களின் கடமையை வலியுறுத்துவதாக நிறைவு பெறுகிறது.

### வளமை x வறுமை

வளமை x வறுமை என்னும் முரண்பாட்டிற்கு இடையே உலகம் இயங்கிக் கொண்டிருக்கிறது. எனினும் வறுமையின் கோரப்பிடிக்குள் சிக்கியுள்ள உலகின் அழுகுரல், வளர்ச்சித்திட்டங்கள் என்னும் பெயரால் நசுக்கப்படுகிறது என்பதை உணர்த்தும் இக்கவிதை வறுமையைக் குறைத்து மதிப்பிட்டு விடமுடியாது என்னும் எச்சரிக்கையையும் உரக்க எழுப்புகிறது. இதனை,

"உலகத்தின் வளத்தினிடையே
மௌனமாக
பஞ்சம் கால் நீட்டிப்படுத்திருக்கிறது.
ஒட்டி உலர்ந்த குழந்தையின் பசிக்குரல்போல
அது நீணமாக ஒலிக்காதுதான்.
ஆனால் அதற்காக அதன் கொடூரத்தைக்
குறைத்து மதிப்பிட்டு விட
முடியாது" (ப.5)

என்னும் கவிதை வெளிப்படுத்துகிறது.

### முதலாளித்துவத்தை அடையாளம் காட்டுதல்

இயற்கை அழிக்கப்படுவதைக் கண்டு குமுறும் சூழலியாளர்கள் எழுப்பும் உரிமைக்குரலுக்கு எதிர்க்குரல் எழுவதையும் இந்நூல் எடுத்துரைக்கிறது. உலகம் படிப்படியாக அழிந்து கொண்டிருக்கிறது என்னும் மெய்ம்மைக்கு எதிராக, அள்ள அள்ளக் குறையாதது இயற்கை என்று கூறிக்கொண்டு சூழலியல் சீர்கேடுகளைக் கவனத்தில் கொள்ளவேண்டியதில்லை என்னும் முதலாளியச் சிந்தனையை இந்நூல் வன்மையாகக் கண்டிக்கிறது.

"பூவுலகே
நீ விடை பெறப்போகிறாயா?
சாகும் தருவாயில் இயற்கை அன்னை,
வளர்ச்சிப் பொன்னாடையில் குதறப்பட்ட பூமி.

வெளிச்சப் புள்ளிகளுக்கிடையே எமனின் அழைப்பு.
நலிந்த குடிசைகளிலிருந்து தீன ஓலங்கள்
சுற்றுலாப் பயணிகள் இறைத்த வெள்ளி
நாணயங்கள்.
மாசுபட்ட நீரால் ஒதுங்கும் சீல்கள்,
இயற்கை அள்ள அள்ளக் குறையாது
என்ற தத்துவத்தைக் கேலி செய்யும்
நடைமுறையாய் நீ!" (ப.7)

என்னும் பகுதி சூழல் சீர்கேடு குறித்த கருத்தியல்களையும் அதற்கான போராட்டங்களையும் கேலிசெய்யும் நடைமுறை தொடர்வதை உறுதிசெய்கிறது. "போராட்டம் என்கிற சொல்லே, இலக்கிய நயமற்ற, ஏன் நாகரிகப் பண்பற்ற- சொல்லாக அவர்களுக்குத் தொனிக்கிறது. அதைக் கேட்ட மாத்திரத்தில் சிலர் ஒதுங்கிச் சிலர் ஒதுங்கி ஓடிப்போவது கூடப் பரவாயில்லை. தமது தெம்பின்மையையும் நாடித்தளர்வையும் மறைப்பதற்காகப் பலவிதமான இலக்கிய நியாயங்களை அள்ளி வீசுவதுதான் ஒருங்கே வேடிக்கையாகவும் வேதனையாகவும் இருக்கிறது" (கு.சின்னப்பபாரதி(1995), முன்னுரை. ப.ix] என்னும் ஆர். கே. கண்ணனின் கருத்து இங்கு ஒப்புநோக்கத்தக்கது.

**வேளாண்மைக்கு எதிரான ஆட்சி நடைமுறைகள்**

போக்குவரத்து வசதி என்பதை முன்னிறுத்திச் சாலைகள் இடுவதற்கும், அடர்ந்த காடுகளை அழித்துவிட்டுப் புதிதாக இடப்பட்ட சாலைகளின் ஓரங்களில் மரங்களை நடுவதற்கும் முயல்கின்ற ஆட்சியாளர்களை மகான்களாக உயர்த்திப் பேசும் கருத்தியல் திணிப்பு பண்டைக்காலப் பேரரசுகள் தொடங்கி இன்றைய முடியாட்சி வரைக்கும் நடந்து கொண்டே இருக்கிறது.

"பேரரச நிர்வாக நடைமுறைகளுக்கான
காடுகளை அழித்து
சாலைகளைப் போட்டது.
காடுகளை வெட்டிவிட்டுச் சாலையோரம் மட்டும்
மரம் நட்ட
பேரரசர்கள்
சரித்திரத்தில் மகான்களாக மாறிப்போனார்கள்" (ப.19)

அதே வேளையில் வேளாண்மை பாதுகாப்பு, சூழலியல் அக்கறை என்னும்



பெயரில் போராட்டங்கள் முன்னெடுக்கப்படும்போது போராளிகளை அடிபணிய வைப்பதற்கு அதிகார மையங்கள் மேற்கொள்ளும் சட்ட அடிப்படையிலான நெருக்குதல்களையும் இந்நூல் எடுத்துரைத்துள்ளது.

"மனிதர்களை மண்டியிட வைப்பது ஒன்றும் பெரிய காரியமில்லை.
போலீசைக் கூப்பிடு.
எல்லைக்காவல் படையைக் கூப்பிடு.
ராணுவத்தை அழை.
தேசத் துரோகி என முத்திரை குத்து
பட்டினி போடு
அவன் மனைவியை மிரட்டு.
போலீஸ் நிலையத்தில் வைத்துச் சித்திரவதை செய்.
செத்துப் போய்விட்டால் புளிய மரத்தில் கட்டித்
தொங்கவிடு." (ப.25)

என்று ஆட்சியாளர்களின் செயல்பாடுகளை இக்கவிதை நூல் அம்பலப்படுத்தி உள்ளது. "வளர்ச்சி குன்றிய நாடுகள் தங்கள் உள்நாட்டு முதலாளியத்தின் வளர்ச்சிநிலைக்கேற்ப உலக முதலாளியத்தோடு உறவு கொள்கின்றன. இந்நாடுகளில் தேசிய முதலாளிகள்- தரகு முதலாளிகள் என்ற அரசியல் ரீதியான வேறுபாடுகள் எல்லாம் அழிக்கப்பட்டுவிட்டன. எந்தத்திசைவழியில் அரசைச் செலுத்துவது என்பது அந்தந்த நாட்டு உள்நாட்டுப் போராட்டத்தில் மேலாதிக்கம் பெற்ற பிரிவினர் அல்லது பிரிவினர்களின் கைகளில் இருக்கிறது" [ஞானி(1998), ப.81] என்னும் கூற்று போராட்டங்களைக் கண்டு ஆட்சியாளர்கள் மேற்கொள்ளும் எதிர்ப்பு நடவடிக்கையின் காரணத்தை உறுதிசெய்கிறது.

**பசுமைப் புரட்சியின் பெயரால் சீரழிவு**

உலகெங்கும் 1940களில் அறிமுகப்படுத்தப்பட்ட பயிர் நுட்பங்கள் வேளாண்மை உற்பத்தியைப் பெருக்கின. இந்த வேளாண் தொழில்நுட்பமும் அதனால் நிகழ்ந்த சமூகப் பொருளாதார அரசியல் மாற்றங்களும் பசுமைப்புரட்சி எனப்படுகிறது. 1950களில் வேளாண் உற்பத்தி பெருகிய போதிலும், 1960களின் மத்தியில் உணவுப்பஞ்சம் தோன்றியது. மக்கள் தொகை அதிகரிப்பு, தொழில் உற்பத்திச் செலவினங்கள் ஆகியவற்றால் வேளாண் வளர்ச்சி பாதிக்கப்பட்டது. பல மில்லியன் டன் தானியங்கள் இறக்குமதி செய்யவேண்டிய தேவை ஏற்பட்டது. பாகிஸ்தான், சீனா

நாடுகளுடன் மேற்கொள்ளப்பட்ட போர்களின் பாதிப்பும் உணவு உற்பத்தியைப் பாதித்தது. இத்தகைய பின்னணியில் உணவு உற்பத்தியில் தன்னிறைவை அடைவதற்காக இந்தியாவில் 'பசுமைப்புரட்சி" தொடங்கப்பட்டது.

1966இல் தலைமை அமைச்சராக இந்திரா காந்தி பொறுப்பேற்றபிறகு வேளாண் உற்பத்தியைப் பெருக்க எடுத்த முயற்சியின் விளைவால் 1968இல் இந்திய விவசாயிகள் கோதுமை உற்பத்தியில் வியத்தகு வளர்ச்சியை எட்டியது. இதனால் அமெரிக்காவைச் சார்ந்த வில்லியம் காட் என்பவர் பசுமைப்புரட்சி என்னும் சொல்லை முதன்முதலாகப் பயன்படுத்தினார். வீரியமான விதைகள், வேதி உரங்கள், பூச்சிக் கொல்லிகள், டிராக்டர்கள், பம்ப் செட்கள் போன்றவற்றைப் பயன்படுத்தும் நவீன வேளாண்முறைகள் இந்தியாவில் அறிமுகப்படுத்தப்பட்டன. இத்தகைய தொடர் முயற்சிகளால் 1980களில் இந்தியா உணவு உற்பத்தியில் தன்னிறைவு அடைந்தது.

ஆனால் பூசசிக்கொல்லி, செயற்கை உரங்களை வளரும் நாடுகளிலிருந்து வரவழைப்பதற்கே பசுமைப்புரட்சி வழிசெய்தது என்னும் குற்றச்சாட்டையும் புறம் தள்ளமுடியாது. இத்தகைய எதிர்விளைவை இந்நூல் பின்வருமாறு பதிவுசெய்துள்ளது.

"உள்ளூர்ப் பாரம்பரிய ரகங்களுக்குப் பதில் வீரிய ரகங்கள்.
கலப்பையின் இடத்தில் டிராக்டர்.
நீர் இறைத்துக் கஷ்டப்படுகிறார். இதோ மோட்டார்.
கம்போஸ்ட் உரம். இலைதழை உரமா?
எந்தக் காலத்திலடா இருக்கிறாய்?
சூப்பர் பாஸ்பேட் 17 17 17
இவ்வளவுக்குப் பிறகும் பூச்சித் தொல்லையா?
மூக்கில் துணிகூட கட்டாது தெளி டி டி டி
தாய்ப்பாலில் இருந்தே உனக்குப்
பழக்கமானது தானே.
டாக்டர் பட்டங்களும் மான்யக் கிரீடங்களும்
வேளாண்மை
அறிஞர்களை அலங்கரித்தன.
ஆராய்ச்சிக்கெல்லாம் நிதி?
இதற்குக்கூட உதவாமல் பிறகென்ன
உலகவங்கி மேற்கத்திய நிதிநிறுவனங்கள்.? (ப.27)



என்று பசுமைப்புரட்சியின் விளைவுகளை எடுத்துரைக்கும் இந்நூல் கிழிந்த கோவணம் கட்டித்திரியும் விவசாயிகள் கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்து கடன்பெறுவது மட்டுமல்லாமல் சிறுகச் சிறுகச் சேர்த்த நகைகளையும் அடகுக்கடைகளில் தொலைத்துக் கொண்டிருக்கும் அவலநிலையை எள்ளல் நடையில் வெளிப்படுத்துகிறது. அதே வேளையில் அரசியல் இயக்கங்களோ கடன் தள்ளுபடி என்னும் முழக்கத்தை முன்வைத்து வாக்கு பொறுக்கும் அரசியலை முன்னெடுகின்றனவே தவிர மரபுசார் வேளாண்மையைக் குறித்துக் கவலை கொள்ளவில்லை என்பதையும் கவிதைகளுடன் ஊடாக வெளிப்படுத்தியுள்ளனர். இதனை,

*"கூட்டுறவே நாட்டுயர்வு"*
*வாங்கிய கடனுக்கு வட்டி கட்ட மீண்டும் கடன்.*
*அவசரத்திற்கு அடகு வைக்க இருக்கவே இருக்கிறான் சேட்.*
*கடனை ரத்து செய்து கரகோஷம் பெற்று ஓட்டு*
*வாங்குவது மட்டும்*
*அரசியல்வாதிகளின் ஏகபோக உரிமை.*
*பாரம்பரிய வேளாண்மைமுறை ஒரேடியாய்*
*ஒழிந்துபோனது*
*இயற்கையின் மறுசுழற்சி துண்டிக்கப்பட்டது."* (ப.28)

என்னும் பகுதி எண்பிக்கிறது. இதனால் தான் இயற்கை விஞ்ஞானி நம்மாழ்வார், "*இந்திய உழவர்களின் கழுத்தைக் குறிவைத்து வீசப்பட்ட கத்திக்கு இன்னோர் பெயர் 'பசுமைப்புரட்சி'. நிலவளத்தையோ உழவர்களின் நலனையோ மனத்தில் கொள்ளாமல் பண்ட உற்பத்தியை மட்டுமே இலக்காகக் கொண்டு செயல்படும் 'உழவர் விரோத' தொழில்நுட்பம் அது*" [கோ.நம்மாழ்வார் (2011), ப.5] என்று சுட்டிக்காட்டுகிறார்.

**தனிமனிதரின் சூழல்சார் பொறுப்பு**

காலந்தோறும் இயற்கையைச் சிதைக்கும் இழிசெயல் இச்சமூகத்தில் தொடர்ந்து கொண்டே இருக்கிறது. இத்தலைமுறைக்குத் தப்பித்துக் கொள்ளலாம். எதிர்காலத் தலைமுறை தன்னைத் தற்காத்துக் கொள்ளட்டும் என்னும் பொறுப்பற்ற தடத்தில் இச்சமூகம் பயணித்துக் கொண்டிருப்பதைக் கண்டு கலங்கும் சூழலியலாளர்கள் சமூகத்தைத் தட்டியெழுப்பும் எச்சரிக்கையாளர்களாகத் தம்மை அடையாளப்படுத்துகின்றனர். இதனை,

*"மனிதா*
*விழித்துக்கொள்.*
*சுற்றுப்புறச் சூழலை நாசமாக்காதே.*
*உன் தலையில் நீயே மண்ணைப்*
*போட்டுக்கொள்ளாதே*
*என்ற எச்சரிக்கையோடு வந்தான்*
*சூழலியலாளன்" (ப.35)*

என்னும் பகுதி உறுதிசெய்கிறது. இதே கருத்தைக் "காலப்போக்கில் நமது வேளாண் வித்துக்கள் ஆற்றலிழந்து அழிந்துபோக, பன்னாட்டு நிறுவனங்களையோ, அவர்களது இந்தியப் போக, பன்னாட்டு நிறுவனங்களையோ, அவர்களது இந்தியக் கூட்டாளிகளையோ, என்றென்றும் சார்ந்திருக்கும் அவலநிலை உண்டாகும். புதிய காலனியாதிக்கத்தின் அடிமைத்தளைக்குள் நமது வேளாண்மை சிக்கும். எனவே நமது பாரம்பரிய வித்துக்களைப் பாதுகாக்கவும், புதிய வித்துக்களால் வரவிருக்கும் பேராபத்திலிருந்து தப்பவும் நாம் அணிதிரளவேண்டும்" [ஆ.சிவசுப்பிரமணியன் (1996), ப. 195] என்னும் ஆ.சிவசுப்பிரமணியனின் எச்சரிக்கையோடு பொருத்திப் பார்க்கலாம்.

அதே வேளையில் இயற்கை வேளாண்மையைப் பேணும் சூழலியலாளர்களை வளர்ச்சியின் எதிரிகளாக, நாட்டுப்பற்று அற்றவர்களாகச் சித்திரிக்கும் வெறுப்புணர்வு அரசியலின் போக்கினை நன்கு உணர்ந்த அவர்கள், தங்களைப் பற்றிய தன்னிலை விளக்கத்தினை இக்கவிதையின் வாயிலாக இச்சமூகத்திற்கு அளிக்கின்றனர்.

"அறிவியலுக்கே நாங்கள் எதிரானவர்கள் அல்ல.
மக்களுக்கான அறிவியலே நாங்கள் வேண்டுவது
என்பதை எவ்வாறு எடுத்து வைக்கப் போகிறீர்கள்?
எப்படிச் செய்யப் போகிறீர்களோ தெரியாது.
ஆனால்
அதை உடனடியாகச் செய்யவேண்டும்." (ப.40)

என்று சுற்றுச்சூழல் நலம் மற்றும் இயற்கை வேளாண்மை சார்ந்து பணிகள் ஆற்றவேண்டிய காலத்தின் கட்டாயத்தை இக்கவிதை உணர்த்துகிறது.



"சூழலியாளர்கள் கடைசியாக வந்தனர்
ஆனால் கடைசி என்பது முடிவானதல்ல..." (ப.40)

என்று தங்களின் இருப்பை வெளிப்படுத்தும் இக்கவிதைநூலில் மண்ணின் மரபுகள் விடுபட்டுப் போன இன்றைய செயற்கையான வாழ்க்கைச்சூழலில் இயற்கைமரபுகள் பேணப்படும் என்னும் நம்பிக்கை வீண்போகவில்லை என்பதை 'இன்னும் மீதமிருக்கிறது நம்பிக்கை' என்னும் சொற்றொடர்கள் கவிதையின் ஊடாக இழையோடிக் கிடந்து உணர்த்துகின்றன.

## தொகுப்புரை

இலக்கியம் மற்றும் பண்பாட்டியல் ஆய்வுகளில் சூழல்நலம் பேணும் சிந்தனைகளை வளர்த்தெடுக்கத் துணைபுரிந்தது சூழலியல் திறனாய்வாகும். இத்தகைய திறனாய்வின் திசைகளை அடியொற்றிப் புனைவிலி, புனைவு ஆகிய இரு நிலைகளில் உருவெடுத்ததே பசுமை இலக்கியமாகும். 'இன்னும் மீதமிருக்கிறது நம்பிக்கை' என்னும் தமிழின் முதல் சூழலியல் கவிதை பசுமை இலக்கியத்தின் செல்நெறிகளை முழுமையாக அடையாளம் காட்டுகிறது. உலகினை அச்சுறுத்தும் வறுமை, வேளாண்மையை அழித்திடத் துடிக்கும் முதலாளியியம், வளர்ச்சித்திட்டங்கள் என்னும் போர்வையில் அதற்குத் துணைபுரியும் ஆட்சியாளர்கள், வேளாண்மை காக்கப் போராடும் போராளிகள் மீதான ஒடுக்குதல், பசுமைப்புரட்சி ஏற்படுத்திய தீமைகள் ஆகிய சிக்கல்களைப் படம்பிடித்துக் காட்டியுள்ளது. வெறும் சிக்கல்களை மட்டுமே எடுத்துரைக்காது இதற்கு எதிராகச் சூழலியலாளர்கள் போராட வேண்டிய தேவையையும் உறுதி செய்கிறது. இவ்வாறு சூழலியல் சார்ந்து கருத்தியல் மற்றும் அரசியல் தளத்தில் மாற்றங்களை விழையும் பசுமை இலக்கிய நோக்கினை இக்கவிதைத் தொகுப்பு நிறைவு செய்துள்ளது.

## துணைநின்ற நூல்கள்

1. சிவசுப்பிரமணியன்.ஆ., அடித்தள மக்கள் வரலாறு, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, முதற்பதிப்பு, 2016
2. சின்னப்ப பாரதி.கு., சங்கம், செல்மா வெளியீடு, சிவகங்கை, இரண்டாம்பதிப்பு, 1995
3. ஞானி( தொகு.), மார்க்சியத்தின் எதிர்காலம், நிகழ் வெளியீடு, கோயமுத்தூர், முதற்பதிப்பு, 1998

4. நம்மாழ்வார்.கோ., இயற்கை வேளாண்மை அடிப்படைத் தேவைகள், இயல்வாகைப் பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு, 2018

5. ராஜதுரை. எஸ்.வி., எழுத்துகளை எரித்தல் கருத்துகளை ஒடுக்குதல், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, முதற்பதிப்பு, 2015

6. இன்னும் மிதமிருக்கிறது நம்பிக்கை, பூவுலகின் நண்பர்கள் வெளியீடு, சென்னை, முதற்பதிப்பு, 2017

7. http://kaviyam.in. மின்னிதழ் - டிசம்பர் 2016

***